பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 03 சனிக்கிழமை (16-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 111

### மன்னாரில் கடற்புலிகள் வீரசாதனை

# 3 கடற்படை வேவுப் படகுகள் மீது தாக்குதல்

# ஒன்று அழிப்பு; ஒன்று சேதம்; அடுத்தது மீட்பு!

## பத்து கடற்படையினர் சாவு; 4 பேர் காயம்

## இரு சடலங்களும் ஆயுதங்களும் புலிகள் வசம்!

சாவகச்சேரி, மார்ச் 16

மன்னார் கடற்பகுதியில் ரோந்து சென்ற ஸ்ரீலங்கா கடற்படையினரின் மூன்று வேவுப் படகுகளை கடற்புலிகள் நேற்று நண்பகல் வழிமறித்துத் தாக்கினர்; இத்தாக்குதலில் கடற்படையினரின் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது; மற்றையது சேதப்படுத்தப்பட்டது; மூன்றாவது படகு கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பத்து கடற்படையினர் கொல்லப்பட்டனர்; நான்கு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்; உயிரிழந்த படையினரின் இருவரது சடலங்களும் படையினரின் ஆயுதங்களும் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மன்னார் பள்ளிமுனையிலிருந்தும், எருக்கலம்பிட்டியிலிருந்தும் ரோந்து வந்த வேவுப் படகுகள் மீதே நேற்று நண்பகல் 12-20 மணிக்கு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளுக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் படகுகளின் நடமாட்டத்தைக் கண்டு இராணுவ, கடற்படை கூட்டு அணிகள் நேற்றுக் காலை கடலுக்குச் சென்றதாகவும் —

பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகளைக் கொண்ட குழு இந்த இராணுவ, கடற்படை கூட்டு அணிகள் மீது எதிர்த்தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 11 கரும்புலிகளின் நினைவு நிகழ்வுகள் நாளையும் நாளை மறுதினமும்!

சாவகச்சேரி, மார்ச் 16

அளவெட்டியில் கடந்த ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி ஊடுருவித் தாக்குதல் நடத்திய 11 கரும்புலிகளின் எழுச்சி இறுதி நினைவு நிகழ்வு நாளையும், நாளை மறுதினமும் இடம்பெறவிருக்கிறது.

இந்தக் கரும்புலிகளின் பிரதிமைப்படங்கள் நாளை பெற்றோரின் இல்லங்களுக்கு அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்படும்.

நாளை மறுதினம் பூரண இராணுவ மரியாதைகளுடன் அங்கிருந்து அவை எடுத்துச் செல்லப்பட்டு விசேடமாக அமைக்கப்பட்ட மேடைகளில் பொதுமக்களின் வீரவணக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர் கண்டியில் கைது

சாவகச்சேரி, மார்ச் 16

கொழும்பில் இருந்து கண்டிக்குச் சென்ற மூன்று தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அதேவேளை — திருகோணமலைக்குச் சென்ற யாழ்ப்பாணத்து தமிழ்ப் பெண் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்பனா என்ற இந்தப் பெண் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பியிருந்தார். (இ-3)

## அரிசி ஆலைகளை சுற்றிவளைத்து தம்புள்ளவில் 137 தமிழர் கைது

கொழும்பு, மார்ச் 16

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை தம்புள்ள நகரைச் சுற்றியுள்ள கிராமப் புறங்களில் 20 அரிசி ஆலைகளில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட தம்புள்ள பொலிஸார் அவ்வாலைகளில் வேலை செய்த 137 தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கென தம்புள்ள பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணையின் பின் இவர்களில் 19 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய 118 பேரும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை கண்டி சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## டிரான்ஸ்போமர் வெடித்து அ'புரத்தில் இருவர் பலி!

### அகதி முகாம் தீப்பிடித்து நாசம்

கொழும்பு, மார்ச் 16

அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கலாவெவவில் உள்ள அகதி முகாம் ஒன்றில் டிரான்ஸ்போமர் ஒன்று வெடித்துச் சிதறியதால் அகதி முகாம் முற்றாக தீப்பிடித்து நாசமானது.

இச்சம்பவத்தில் 50 குடிசைகள் நாசமாகின.

நேற்று முன்தினம் மாலை 7.15 க்கு நடந்த இச்சம்பவத்தில் இருவர் இறந்தனர். 40 பேர் எரிகாயங்களுக்கு உள்ளானார்கள்.

காயமடைந்தவர்கள் கெக்கிராவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாலை வேளையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணி கடலில் மீண்டும் துருப்புக் காவிகள்

செம்பியன்பற்று, மார்ச் 16

வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் துருப்புக் காவி தரையிறங்கு கலங்களும் டோறாப் படகுகளும் காணப்பட்டன.

மொத்தம் மூன்று துருப்புக் காவிக் கலங்களையும், அவற்றுக்குக் காவலாக பத்துக்கு மேற்பட்ட டோறா ரோந்துப் படகுகளையும் காண முடிந்தது.

துருப்புக் காவித் தரையிறங்கு கலங்கள் நேற்றுப் பிற்பகல் நான்கு மணி வரை நங்கூரமிட்டு நின்றன.

இவற்றிக்குப் பாதுகாப்பு வழங்கு முகமாக நான்கு ஹெலிக்கொப்டர்கள் கட[illegible] வான் பரப்பில் தாழப் பறந்து திரிந்ததையும் [illegible] முடிந்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மூதூரில் குண்டு வீச்சு!

கொழும்பு, மார்ச் 16

மூதூர் பகுதியில் விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றதாக நேற்றைய கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சே[illegible] தெரியவில்லை. (உ-3)

## கடற்புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்

சாவகச்சேரி, மார்ச் 16

மன்னார் கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் வேவுப் படகுகள் மீது கடற்புலிகள் நேற்று நடத்திய தாக்குதலின் போது கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ பி. கே. எல். எம். ஜி. | — | 01 |
| ★ ஏ. கே. எல். எம் ஜி. | — | 02 |
| ★ ஏ. கே. துப்பாக்கிகள் | — | 04 |
| ★ செற் | — | 01 |
| ★ பி. கே. ரவைகள் | — | 250 |
| ★ பி. கே றம் மகஸின் | — | 07 |
| ★ ஐ. எம். ரவை லிங்குகளுடன் | — | 700 |
| ★ ஐ எம். ரவை | — | 300 |
| ★ ஏ. கே. மகஸின் | — | 10 |

### கிரிக்கெட் வெற்றிக் களிப்பில்

## தமிழர் கடைகளை தாக்கிய சிங்கள காடையர் கும்பல்

உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் அரை இறுதிப் போட்டியில் ஸ்ரீலங்கா அணி வெற்றி பெற்ற களிப்பில் வெறி கொண்ட சிங்கள காடையர்கள் கண்டி பேராதனை வீதியில் உள்ள தமிழ் கடைகளுக்கு கல் வீச்சு நடத்தியதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரை இறுதிப் போட்டியில் இந்தியாவைஸ்ரீலங்கா தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவானது தெரிந்ததே. (இ-5)

### புத்தளம் சிமெந்து ஊழல்

## விவாதம் நடத்த வருமாறு சவால் விடுகிறார் ரணில்!

புத்தளம் சிமெந்துத் தொழிற்சாலை விற்பனை மீதான ஊழல் தொடர்பாக நேரடி தொலைக்காட்சி விவாதம் ஒன்று நடத்துவதற்குத் தயாரா என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு பகிரங்க சவால் விடுத்திருக்கின்றார்.

இந்த விற்பனை தொடர்பாக அமைச்சர் ஒருவருக்கு நான்கு லட்சம் டொலர் லஞ்சம் வழங்கியதாக வர்த்தகப் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பாக அரசின் மீது தாங்கள் கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தாமதப்படுத்துவதற்காக இந்த விவகாரம் சம்பந்தமாக குற்றப்புலனாய்வு விசாரணையை அரசு ஆரம்பித்திருப்பதாகவும் —

ஆனால் அந்த விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கையில்லை என்றும்—

ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (உ-6)

## இந்தியா கைப்பற்றிய 4 கப்பல்களில் ஆயுதங்களா?

கொழும்பு, மார்ச் 16

மேற்கிந்திய கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையினர் நான்கு கப்பல்களைக் கைப்பற்றியதாகவும்—

இந்தக் கப்பல்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றி வந்தன என்ற சந்தேகத்தின் பேரி[illegible] வழிமறிக்கப்பட்டு [illegible]ப்பற்றப்பட்டதாகவும்—

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இந்த விவரத்தை இலங்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சாலி (Honda) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; S. கண்ணன், சிவா எரிபொருள் நிலையம், நெல்லியடி- யாழ். வீதி, பெற்றோல் நிலையம் அருகாமை, நெல்லியடி. (41033)

எறிக்கா தமிழ் தட்டச்சு இயந்திரம், ஸ்டீல் கபினட், சோகேஸ், கதிரை, மேசைகள், கட்டில் தளபாடங்கள், கண்ணாடி மேசை, கலர் T. V. 20'' x 32'' ஆகியன விற்பனைக்குண்டு. மாலை 2-00 மணிக்கு பின் பார்வையிடலாம். சோ. நடராசா, திருத்தணிகை, விசுவர் வளவு (மத்திய சனசமூக நிலையத்திற்கு அருகாமையில்), சரசாலை. (41035)

### ஆனந்தம் சீயாக்காய்

சித்த மருத்துவ ஆலோசனையின்படி மூலிகைகள் சேர்த்து தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சியாக்காய் பவுடர் கூந்தல் அழகியுடனும் கோபுர சின்னத்துடனும் வந்தது. இப்போ கோபுர சின்னத்துடன் மட்டும் வருகிறது. தற்போதைய சீதோஷ்ண நிலைக்கேற்றவாறு சிரசின் தனித்துவத்தைப் பேணுமுகமாக தயாரிக்கப் பெற்றது ஆனந்தம் சீயாக்காய் பவுடர். கேட்டு வாங்கி பாவித்து பலன்பெறுவீர்களாக. (40967)

### சோதிடம்

ஜாதகம் கணிக்க, பலன் பார்க்க சோதிடர் சிவா (நல்லூர்) 9 00 மணி முதல் 1.00 வரை சந்திக்கலாம். மடத்தடிச் சந்தி, மட்டுவில் பெருங்குளம் வீதி. (41039)

வெளிநாடு, ஜெனன ஜாதகக் குறிப்பு எழுத, வீட்டு நிலையம், விவாகப் பொருத்தம், சந்தான விருத்தி, கிரக தோச நிவர்த்தி, சாந்தி முறைகள் பிரபல சோதிடர் சிவகந்தசாமி ஆச்சாரி, அம்பாள் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (41040)

### காணவில்லை

ஒரு பக்க கொம்பு அறுக்கப்பட்டுள்ள சிவப்பு நிற உயர் இன பசு மாடும், அதன் வெள்ளை நிற கன்றும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை. இவற்றைக் கண்டவர்கள் க.இலகுநாதன், புகையிரத நிலைய முகாம், சாவச்சேரியுடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். (C/4115)

### O/L 95, 96

Distinction, Credit பெறு பேறடைய கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் (ஆண்டு 9, 10) விசேடமாகவும், துரிதமாகவும் B. Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். ஆசிரியர் மே/பா சரவணமுத்து கமலாச்சி, வேதவனப்பிள்ளையார் ஒழுங்கை, கல்வயல், சாவகச்சேரி. (40948)

---

## ஆத்மஜோதி நா. முத்தையா

ஞாபகார்த்த சபை

## அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம்:- இன்று **16 - 03 - 96**
சனிக்கிழமை காலை 9 மணி

இடம்:- நல்லை ஆதீனம், பன்றிக்கேணி
முருகன் வீதி, மீசாலை.

வைத்திய கலாநிதி செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் தலைமையில் **01 - 03 - 96** இல் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத் தீர்மானப்படி அங்குரார்ப்பண வைபவம் நடைபெறவுள்ளது.

அமைப்பாளர் சார்பில்;
திரு. த. தர்மலிங்கம்
காசிவாசி செந்திநாதையர் வீதி,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தற்போதைய முகவரி:
குருபவனம்,
கண்டி வீதி, சாவகச்சேரி. (41045)

---

## பணிநிலை வெற்றிடங்கள்

விரைவில் மாங்குளம் பகுதியில் செயற்படவிருக்கும் தனியார் மருத்துவமனைக்கு கீழே குறிப்பிடப்படும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

விண்ணப்பிக்க விரும்புவோர் இன்று **16-03-96**(சனி) காலை 10 மணி முதல் 12 மணி வரை யாழ். சாலை, கிளிநொச்சியில் மருத்துவமனைக்கு முன்பாக அமைந்துள்ள நோயாளர் நலன்புரிச் சங்க நடுவப் பணியகத்திற்கு உரிய ஆவணங்கள், சான்றிதழ்களுடன் நேரில் சமுகந் தரவும்.

### பணிநிலைகள்

01. மருத்துவர் — (M.B.B.S.) OR (R. M. P.)
02. பல் மருத்துவர் — (DENTAL SURGEON)
03. தாதிகள் — (NURSES)
04. பரிசாரகர் — (ATTENDENT)
05. ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் — (M. L. T.)
06. மருந்தாளர் — (PHARMACIST)
07. மருத்துவ மாது — (MIDWIFE)
08. சாதாரண தொழிலாளர் — (O.L.)
09. சுத்திகரிப்புத் தொழிலாளர் — (S. L.)
10. பாதுகாப்பு ஊழியர் — (WATCHER)

★ அனுபவமுடையவர் விரும்பத்தக்கது. (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

நடுவப்பணியகம்,
நோயாளர் நலன்புரி சங்கம்,
யாழ். சாலை, கிளிநொச்சி.

(சி-4111)

---

அருள்மிகு

## ஸ்ரீ துர்க்காதேவி

## தேவஸ்தானம்

சாவகச்சேரி

அம்பிகை அடியார்களின் கவனத்திற்கு;

அடியார்களின் வசதியை முன்னிட்டு மேற்படி தேவஸ்தானத்தில் தினசரி நடைபெறும் பூஜை நேரமும் ஆலயத்திருக்கதவு திறந்திருக்கும் நேரமும்:-

தினசரி— காலை சந்திப்பூஜை — **8-00** மணி
உச்சிக்காலம் — **10-00** மணி
சாயரட்சை (மாலை) — **5-00** மணி

திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் உச்சிக்காலப் பூஜை **12-00** மணி. செவ்வாய் சாயரட்சை பூஜை — **3-30** மணி.

பங்குனித் திங்களை முன்னிட்டு அடியார்கள் பொங்கி வழிபட வசதியாக காலை **5-00** மணி முதல் மாலை **7-00** மணி வரை ஆலயம் திறந்திருக்கும். இத் தினங்களில் விசேஷ பூஜைகள் இடம் பெறும்.

நன்றி

இங்ஙனம்
தர்மகர்த்தா
ப. மஹாகணபதி சர்மா

(40929)

---

## - போஸ்கோ -

பாடசாலை உபகரணங்கள், அலுவலக பாவனைப் பொருள்கள், காகிதாதிகள் விற்பனையாளர்.

கிளிநொச்சியில்
யாழ். வீதி,
(நீதிமன்று முன்பாக),
கிளிநொச்சி.

சாவகச்சேரியில்
யாழ். வீதி,
(பழைய பெற்றோல் செட்),
சாவகச்சேரி.

(சி-4101)

---

## சாவகச்சேரி லயன்ஸ்கழகம்

### கண் பரிசோதனை முகாம் - 3

வரணி

காலம்: 17 - 03 - 1996
ஞாயிறு காலை 8 - 30 மணி

இடம்; வரணி மகா வித்தியாலயம்

கண் சிகிச்சை நிபுணர்கள்
டாக்டர் (செல்வி) மங்கை சரவணமுத்து
டாக்டர் (திருமதி) அனுசூயா சிறிதரன்

கண்ணாடி வழங்குநர் பரிசோதனை
எஸ். எம். பெர்ணாண்டோ நிறுவனத்தினர்

இன்னும் பல வைத்திய நிபுணர்களால் இரத்த அமுக்கம், சலரோகம் ஆகிய பரிசோதனைகளும் நடத்தப்படும்.

குறிப்பு: வலிகாமம் பகுதி லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாவ. லயன்ஸ் கழகம்
(சி/4114)

---

கொக்குவில் இந்துக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கத்தின்

## வருடாந்த பொதுக் கூட்டம்

காலம்:-24 - 03 - 96 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி
இடம்:- சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கமும் மௌன அஞ்சலியும்
2. தலைமையுரை
3. சென்ற கூட்ட அறிக்கை
4. கணக்கறிக்கை
5. புதிய உத்தியோகத்தர் தெரிவு
6. பிறவிடயங்களும் நன்றியுரையும்.

குறிப்பு:- வடமராட்சி உறுப்பினர்களுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது இதற்கென பொருளாளர் திரு. இ. சிவலிங்கம், இரட்ணா மோட்டோர்ஸ், கலிகைச் சந்தி, கரவெட்டி என்றமுகவரியில் தொடர்பு கொள்ளவும்.

அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தயவாகக் கேட்டுகொள்கிறேன்.

க. தேவராஜா,
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்.
(40949)

---

# வன்னிக்கு ஐ.நா. டாக்டர்கள் வருவதில் தடங்கல் நிலை

வன்னிப் பிரதேச ஆஸ்பத்திரிகளில் ஐ. நா. டாக்டர்கள் இருவர் பணிபுரிவதற்கு ஏற்பாடாகி இருந்த போதிலும், பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டினால் அது கைகூட முடியவில்லை.

வானொலித் தொடர்பு சாதனங்களை பொருத்த அனுமதி வழங்காததாலேயே ஐ.நா. டாக்டர்கள் வன்னிக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வன்னிப் பகுதியில் உள்ள அஸ்பத்திரிகளில் இரண்டில் பணியாற்றுவதற்கு இரு டாக்டர்களை அனுப்புவதற்கு ஐ. நா. அபிவிருத்தி திட்ட அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த டாக்டர்கள் வன்னியில் பணியாற்ற தொலைத் தொடர்பு சாதனங்களை பொருத்த பாதுகாப்பு அமைச்சு முன்னர் அனுமதி வழங்கியிருந்தது.

ஆனால் தற்போது இந்த அனுமதியை ரத்துச் செய்ததால் ஐ. நா. டாக்டர்கள் வரமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

கிளிநொச்சியில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலகத்துக்கு தொலைத் தொடர்பு கருவி பொருத்துவதற்கும் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காதிருப்பது தெரிந்ததே.

(அ-3)

---

கொக்குவில் மேற்கு மணியர்பதி

## ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

மேற்படி ஆலய மகோற்சவ நாள் எதிர்வரும் புதன்கிழமை (**20 - 3 - 96**) ஆகும். அன்றைய தினம் உசன் கந்தசுவாமி கோவிலில் விசேட அபிஷேசம் செய்ய பரிபாலன சபையினரும் இந்து இளைஞர் சங்கமும் உத்தேசித்துள்ளனர். அன்றைய தினம் உபயகாரர்கள், அடியார்கள், அன்பர்கள் கலந்துகொண்டு முருகப்பெருமானின் இறையருள் பெற்று இஷ்டசித்திகளைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அன்பளிப்பு செய்ய விரும்புவோர் பின்வருவோருடன் தொடர்பு கொள்ளவும்:

★ பொ. முத்துக்குமாரு — தலைவர்;
வீ. நவரத்தினம், விடத்தல் பளை.

★ சி. அன்னலிங்கம். — செயலாளர்,
நீயூ சிற்றி ரேடர்ஸ், சிவன்கோவில் வீதி, பருத்தித்துறை.

★ இ.சிறீகாந்தா — பொருளாளர்,
ராஜ சங்கரி வீதி, சாவகச்சேரி.

★ ம. கா. குகராசா — உபபொருளாளர்,
64, சிவசங்கர், உருத்திரபுரம், கிளிநொச்சி.

ஆலய பரிபாலன சபையும்,
இந்து இளைஞர் மன்றமும்.

41053)

---

தேவை

## அச்சுக்கோர்ப்பாளர்கள் மெசின் மைண்டர்கள்

மேற்படி தொழில்களில் அனுபவமுள்ள ஆண்கள் நேரடியாக வரவும், தெரிவு செய்யப்படுபவர்களுக்கு உணவும் தங்குமிடவசதியும் செய்து கொடுக்கப்படும். தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
உதயன் பணிமனை,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி,

---

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

வருடாந்தப்

## பொதுச்சபைக் கூட்டம்

28-04-1996

மேற்படி கூட்டம் **28-04-1996** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமாசத் தலைவர் திரு. ச. முருகனேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தல் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்தும் சமாசத்துடன் தொடர்பில்லாமலும் இருக்கும் அங்கத்துவ சங்கங்கள் கூட்ட அறிவித்தலையும், பொதுச்சபை பிரதிநிதிக்கான அதிகாரக்கடிதத்தையும் சமாச காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

பதில் மாவட்டச் செயலாளர்.
யாழ். மா. சி. க. கூ. ச. சமாசம்.

சரசாலை வடக்கு,
சரசாலை.
15-3-1996

(41046)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குற்றமுள்ள நெஞ்சு!

இலங்கை வந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் குழு மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

குற்றம் உள்ள நெஞ்சுதான் குறுகுறுக்கும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில் வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி நாட்டில் சகல பகுதிகளிலும் வாழும் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் பலவும் தாறுமாறாக அரசினாலும், அரச படைகளாலும் மிக மோசமாக, கண்மூடித்தனமாக மீறப்படுகின்றன.

நாளாந்த வாழ்க்கையில் ஒரு மனிதனுக்குரிய அடிப்படை உரிமைகளில் 90 சதவீதமானவையும் தமிழர்களிடம் இருந்து பிடுங்கப்பட்டு வருகின்றன. போக்குவரத்து உரிமை தொடக்கம் நிம்மதியாகப் படுத்துறங்கும் உரிமை வரை யாவுமே பறிக்கப்படுகின்றன.

சட்டரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கத்தின் முழுமுதற் கடமையும், பொறுப்பும் தனது பிரசைகளின் உயிர்களைக் காப்பதே; அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்குவதே.

ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில், சிங்கள அரசுகள் அந்தப் பொறுப்புக்கு எதிராக, அரச படைகளைக் கொண்டு மறைமுகமாகவும், ஒளிவு மறைவாகவும், சில வேளைகளில் மட்டும் வெளிப்படையாகவும் தமிழர்களைக் காட்டுமிராண்டித்தனமாகக் கொன்று வருகின்றன.

எனினும் அந்தப் படுபாதகத்தை அவை மறைக்க முற்படுகின்றனவே அன்றி ஒரு போதும் ஒப்புக்கொள்வதில்லை. கொலைகாரன் எவனும் தனது குற்றத்தை ஒப்புக் கொள்வானா?

மட்டக்களப்பில் இப்போது தமிழர் படுகொலைகள் மிக அப்பட்டமாக, பச்சை பச்சையாக, மிருகத்தனமாக இராணுவத்தினரால் நடத்தப்படுகின்றன. ஆனால் அரசு ஒரு போதும் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை.

அண்மையில் நடந்த குமரபுரம் படுகொலைகளைக் கூடத் தயங்கித் தயங்கியே மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அரசு ஒப்புக் கொண்டது.

குமரபுரம் போலன்றி ஐந்து ஆறு என்று தமிழர் உயிர்களை சில்லறையாகக் கொய்த மிகப்பல சம்பவங்கள் மட்டக்களப்பில் நடந்துள்ளன. அவை மறைக்கப்பட்டு விட்டன.

சர்வதேச மன்னிப்புச் சபைக்குழு அங்கு சென்றால் அவை எல்லாம் கணக்குக்கு வந்துவிடும் என்ற பயம் அரசுக்கு.

ஜே. ஆர். — அத்துலத்முதலி காலத்தில் சர்வதேச மன்னிப்பு சபைக்குத் தடை விதித்தும், அதனை எதிர்த்துக் கொண்டும் சிங்கள அரசு தமிழர் மீதான மனித உரிமை மீறல்களை மறைக்க முயன்றது.

சந்திரிகா — ரத்வத்த காலத்தில் மன்னிப்புச் சபையுடன் நல்லுறவைப் பேணிக் கொண்டே தனது கொடுமையை மறைக்க முயல்கிறது இப்போதைய அரசு.

எதிரியைவிட, நண்பனாக நடித்து நெருங்குபவன் தான் மிக ஆபத்தானவன் என்பதனை, சர்வதேச மன்னிப்புச் சபை உணர்ந்து கொண்டு தனது கடமையை விழிப்புடன் செய்தால் சரி.

# எந்த ஒரு வெளிநாட்டுக் கப்பலும் மீன் பிடிக்க அனுமதிக்கப்படமாட்டாது

### கடற்றொழில் அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

இலங்கை கடற்பிரதேசத்தில் எந்தவொரு வெளிநாட்டு மீன்பிடிக் கப்பலும் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று கடற்றொழில், நீரியல் துறை அமைச்சர் இந்திகா குணவர்த்தனா தெரிவித்தார்.

இலங்கை அதன் கடற்பிரதேசத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் என்றும் —

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

### வரவேற்பு

ஸ்ரீலங்கா அரசு சமர்ப்பித்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை இந்திய அரசு வரவேற்பதாக —

இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

## இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை முரண்பாடு நீக்கப்பட்டுவிட்டது

சாவகச்சேரி, மார்ச் 16

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை குறித்து இருந்து வந்த முரண்பாடு தற்போது நீக்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயந்த மக்கள் வசிக்கும் பகுதிகளைச் சேர்ந்த அரச அதிபர்கள் இணைந்து புள்ளி விவரங்களை கடந்த வாரம் கொழும்பில் நடந்த அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் சமர்ப்பித்தானர்.

அந்தப் புள்ளி விவரங்களை ஏற்றுக்கொண்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னர், முல்லைத்தீவு பகுதிகளில் இடம்பெயர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொருள்களை அனுப்புவதென அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

## பெரிய நோட்டுக்களை மாற்ற அலையும் மக்கள்!

கடந்த காலங்களில் காசோலை மாற்றுவதற்காக கடை கடையாக அலைந்த மக்கள் தற்போது பண நோட்டுக்களை (ரூபா 1000/-, 500/-) மாற்றுவதற்காக அலைகின்றனர்.

முன்னர் காசோலை மாற்றுவதற்கு தரகுக் கட்டணம் எடுத்த வர்த்தகர்கள் தற்போது நோக்களை மாற்றுவதற்கு வரும் பாவனையாளர்களிடம் ரூபா நூற்றுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்யவேண்டுமென கூறுகின்றனராம். (இ-117)

### கலந்துரையாடல்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கொத்தணிகளின் கீழ் இயங்கும் சங்கங்களின் தலைவர், முகாமையாளர், கல்வி உத்தியோகத்தர், மற்றும் நிறுவன நிரந்தர — இடம்பெயர்ந்த முன்பள்ளி ஆசிரியர் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 9-30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமூகம் தருமாறு கோரப்பட்டுள்ளது. (இ-ரி)

## தமிழீழ வானொலி

சனி மாலை

- ★ 5-00 — ஆரம்பம்
- ★ 5-02 — எழுச்சி கீதங்கள்
- ★ 5-10 - வேங்கையின் நெஞ்சம்
- ★ 5-30 — பாமாலை
- ★ 6-00 — புதியவை
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — என் தெரிவு
- ★ 6-30 — ஒலிபரப்பு நிறைவு

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

சனி இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — நீங்கள் கேட்டவை
- ★ 8-20 — நேயர் கடிதம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அறிவிப்புகள் தொடர்ந்து மீண்டும் 9.00 மணி வரை நீங்கள் கேட்டவை

ஞாயிறு காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02 — மாவீரர் வணக்கம்
- ★ 7-10 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்.
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 - அறிவிப்புகள் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப் பாடல்கள்.

### கட்அவுட் எரிப்பு

இந்திய - ஸ்ரீலங்கா அணிகளுக்கிடையில் நடந்த கிரிக்கெட் போட்டியைத் தொடர்ந்து இந்திய அணித் தலைவர் அஸாருதீனின் கட்அவுட் கல்கத்தாவில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்தப் போட்டியில் ஸ்ரீலங்கா அணி வெற்றியீட்டியது தெரிந்ததே. (இ-3)

# பாடசாலைகளுக்கு அஸ்பெஸ்டஸ் சீற்

### மாஹேறா கப்பலில் வருகிறது

கொழும்பு, மார்ச் 15

இடம்பெயர்ந்த பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைக்க வசதியாக மூவாயிரம் அஸ்பெஸ்டஸ் சீற்றுகள் அடுத்த சில தினங்களில் வடக்கே எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் திரு. எஸ். பத்மநாதன் அங்கு நடத்திய பேச்சுக்களை அடுத்து அஸ்பெஸ்டஸ் சீற்றுகளை எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மேலதிக அத்தியாவசிய ஆணையாளர் தெரிவித்தார்.

வடக்கே அஸ்பெஸ்டஸ் சீற்றுகள் எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும், அரச அதிபரின் கோரிக்கையை ஏற்று, மூவாயிரம் சீற்றுகளை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாகவும் —

இன்று கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்படும் 'மாஹேறா' கப்பலில் இவை அனுப்பி வைக்கப்படுவதாகவும் —

மேலும் கூறப்படுகிறது.

## கிளிநொசசிப் பகுதிக்கு கொழும்பிலிருந்து அரிசி

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டையடுத்து 450 மெற்றிக்தொன் அரிசி கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவிருக்கிறது.

இது தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லை நடராசா புனர்வாழ்வு. புனரமைப்பு அமைச்சுக்கு விடுத்த கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாகவும் —

அடுத்த மாதம் இந்த அரிசி லொறிகள் மூலம் எடுத்து வரப்படும் என்றும் —

இந்த அரிசி நிவாரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக நெற்செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-3)

### சட்டக்கல்லூரி பிரவேச பரீட்சை

கொழும்பு, மார்ச் 16

இலங்கை சட்டக் கல்லூரியின் அடுத்த கல்வி ஆண்டுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான பரீட்சை விண்ணப்பப் படிவ விநியோகம் இம்மாதம் 22 ஆம் திகதியுடன் முடிவடைவதாக இலங்கை வானொலி அறிவித்தது

விண்ணப்பங்கள் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சட்டக்கல்லூரி பிரவேசப் பரீட்சை இவ்வாண்டு செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபரில் நடைபெறும். (இ-7)

## ஜி. சீ. ஈ பரீட்சையை மே மாதம் நடத்த முடிவு

சாவகச்சேரி, மார்ச் 16

கடந்த டிசம்பர் மாதம் வடக்கில் நடத்தப்படாத ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சை விசேட பரீட்சையாக மே மாத முற்பகுதியில் நடத்தப்படவிருப்பதாக கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளதாக கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்தார்.

ஏப்ரல் முதல் வாரத்தில் இப் பரீட்சையை நடத்த ஆலோசிக்கப்பட்டதாகவும் —

வடக்கில் உள்ள கல்விப் பணிப்பாளர்கள் விடுத்த கோரிக்கையையடுத்து மே மாத முற்பகுதியில் இப் பரீட்சையை நடத்த தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் — அவர் தெரிவித்தார்.

வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கிளிநொச்சியில் மட்டுமே பரீட்சை நிலையங்களை அமைக்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் —

அதனால் மேலதிகமாக 30 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளதாகவும் —

இதற்கு 6 ஆயிரம் கதிரை மேசைகள் தேவை என அரச அதிபர் ஊடாக அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் — அவர் தெரிவித்தார்.

(இ-3)

### கிளிநொச்சியில்

## சில கோட்டப் பாடசாலைகள் முழுதாக இயங்குகின்றன

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை கோட்டத்துக்கு உட்பட்ட சகல பாடசாலைகளும் முழுமையாக இயங்குகின்றன என்று கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்தார்.

கண்டாவளைக் கோட்டத்துக்கு உட்பட்ட கனகபுரம் ம. வி, கனகபுரம் மத்திய கல்லூரி, கனகபுரம் கனிஷ்ட ம. வி, கனகபுரம் இந்துக் கல்லூரி, வட்டக்கச்சி ம. வி, வட்டக்கச்சி அ. த. க. பாடசாலை, இராமநாதபுரம் ம. வி, இராமநாதபுரம் மேற்கு அ. த. க. பாடசாலை ஆகியவற்றில் சகல வகுப்புக்களும் நடைபெறுகின்றன. இடம்பெயர்ந்த மாணவர்களும் அங்கு கல்வி பயில ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பூநகரி, கரைச்சி, பளை கோட்டங்களில் உள்ள பாடசாலைகளில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளதால் அவற்றை முழுமையாக நடத்த முடியாதுள்ளதாகவும் —

முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரையுமே வகுப்புக்கள் நடைபெறுவதாகவும் —

போதிய இடம் இருந்தால் சகல வகுப்புக்களையும் நடத்த கோட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

# வங்கிக் கணக்குகளை வன்னிக்கு மாற்ற வசதி

கிளிநொச்சி, மார்ச் 16

யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்தவர்கள் தமதுவங்கிக் கணக்குகளை வன்னியில் உள்ள வங்கிகளுக்கு இடமாற்ற மக்கள் வங்கி வசதி செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கிளையின் விவரத்தை வன்னியில் உள்ள கிளையில் சமர்ப்பிக்கும் பட்சத்தில் —

அந்த கணக்கு விவரத்தைப் பெற்று வன்னியில் உள்ள கிளைக்கு கணக்கை மாற்ற முடியும் என்று வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஓய்வூதியம் வழங்க வசதியாக ஓய்வூதியர்கள் வங்கிக் கணக்கைத் [illegible] வசதி செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வராஜா இராஜரட்ணம்

கொக்குவில் கிழக்கு நந்தாவிலைச் சேர்ந்தவரும், தற்போது கார்த்திகேசர் லேன், புலோலி மேற்கில் வசித்தவருமாகிய இராஜரட்ணம் செல்வராஜா (தம்பி) (பொறியியலாளர்-பாரெயின்) காலமாகிவிட்டார்.

இவர் லீலாஜெகமலரின் அன்புக் கணவரும், வைஷாலி, ஷியாம் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜரட்ணம் - திருமதி செல்வமணி இராஜரட்ணம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மகனும், கே. எஸ். நடராஜா (Man Nadarajah - முன்னாள் உப அதிபர் - நல்லூர் ஆசிரியர் கலாசாலை) - திருமதி ஜெகரூபி நடராஜா ஆகியோரின் அன்பு மருமகனும், குலேந்திரராஜா (பாரெயின்), திருமதி சந்திரலேகா பரராஜசேகரம், மகேந்திரராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரசேகரம் (ஓய்வு பெற்ற படவரைஞர்), பரராஜசேகரம் (லண்டன்), ஜெகராஜசேகரம் (பாரெயின்), புவிராஜசேகரம் (ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி லலிதா தங்கமலர் கனகசுந்தரம் (ஆஸ்திரேலியா), சிறீசோமசேகரம் (இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி சுவர்ணா (கொழும்பு), திருமதி தமயந்தி (லண்டன்), திருமதி அருள்நாயகி, திருமதி செல்வவதி (பாரெயின்), திருமதி கலைவதனி (ஆசிரியை விவேகானந்தா ம. வி. கொழும்பு), கனகசுந்தரம் (ஆஸ்திரேலியா), திருமதி சரோஜினி (இலங்கை வங்கி) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (16-3-96) காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. புவிராஜசேகரம்
(மைத்துனர்)

கார்த்திகேசர் வீதி (கூவிலுக்கு அண்மையில்),
புலோலி மேற்கு,
(கிராமக் கோட்டடி எரிபொருள் நிரப்பு நிலையம்
அருகாமையிலிருக்கும் ஒழுங்கை),
பருத்தித்துறை. (94116)

## திருமதி வைரமுத்து அசுவதி

(வெள்ளையப்பா)

கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது செட்டிகுறிச்சி, கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்டிருந்த வைரமுத்து அசுவதி 15-03-1996 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சிவராசா (ஆசிரியர், மல்லாகம் மகா வித்தியாலயம்), அன்னலட்சுமி, சூரியகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிரமணியம், (சிமெந்துக் கூட்டுத்தாபனம்),இரத்தினசிங்கம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்),செல்வமலர் ஆகியோரின் மாமியாரும். ரகு, பாபுஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சுந்தரம், மீனாட்சி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16-03-96) சனிக்கிழமை 12.00 மணிக்கு கார்த்திகேசு தட்ணாமூர்த்தியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவராசா (பாபு மாஸ்டர்)
(மகன்)

கா. தட்ணாமூர்த்தி
செட்டியதெரு (கோவிற் சந்தை),
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (41047)

## சண்முகம் மயில்வாகனம்

(மேசன்)

அரியாலையை பிறப்பிடமாகவும், தற்போது வரணி கரம்பைக்குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ச. மயில்வாகனம் நேற்று (15-03-96) காலமானார்.

அன்னார் சண்முகம் தம்பதிகளின் அன்பு மகனும், பருவதத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வராணி, மணிவாசகம் மற்றும் கலைமணி, சண்முகநாதன், குகானந்தன், ஆனந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தருமராசா, ஜெயநிதி, தங்கேஸ்வரி, தேவகுமார். இந்திரா, தயா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(16-03-96) சனிக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகிலா
(பேர்த்தி)

கரம்பைகுறிச்கி,
நித்தி வீதி,
வரணி. (41048)

# படையினர் பிடித்து சென்ற தமிழர் பற்றி தகவலில்லை

கொழும்பில் கடந்த வியாழனன்று ஸ்ரீலங்கா படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட இரு தமிழர்களின் கதி தெரியவில்லை.

அவர்கள் குறித்து அவர்களது உறவினர்களுக்கு தகவல் வழங்க படையினர் மறுத்துவிட்டனர்.

இவர்கள் காணாமற் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்படலாம் என்ற அச்சமும் நிலவுகிறது.

பிடித்துச் செல்லப்பட்ட இருவரும் கொழும்பு ஆமர் வீதியில் வசித்து வந்தவர்கள் ஆவர்.

நீர்வேலியைச் சேர்ந்த இரட்ணசபாபதி மோகனதாஸ் (24 வயது), மத்திய கிழக்கில் இருந்து திரும்பியிருந்த கணபதிப்பிள்ளை சதீஸ்குமார் (30 வயது) ஆகியோரே அந்த இரு தமிழர்களும் ஆவர்.

இது குறித்து மனித உரிமைக் குழுவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## இன்று நிவாரணம்

சாவகச்சேரி, மார்ச் 16

இடம்பெயர்ந்த இந்துக் குருமார் நலனோம்பு நிதியத்தின் இரண்டாம் கட்ட நிவாரணம் இன்று பிற்பகல் 3 மணிக்கு மீசாலையில் உள்ள நல்லை ஆதீனத்தில் வைத்து வழங்கப்படும்.

இடம்பெயர்ந்த இந்துக் குருமார்களில் 65 குடும்பங்களுக்கு பணமாகவும், பொருள்களாகவும் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. (அ)

## 3 கடற்படை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தல் ஒன்றை நடத்தியதாகவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

தாக்குதலுக்கு இலக்கான படை அணிக்கு ஆதரவாக கூடுதல் துருப்புகள் அவசர அவசரமாக அனுப்பப்பட்டதாகவும் பாதுகாப்புஅமைச்சு மேலும் குறிப்பிட்டது.

தாக்குதலுக்கு இலக்கான அப்படகில் அச்சமயம் இருபது படையினர் இருந்ததாக்க தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் பத்துப் பேர் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஏனைய பத்துப் பேரின் கதியும் தெரியவில்லை. இவர்கள் அனேகமாகக் கடலில் விழுந்து மூழ்கி யிருக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்பட்டது. (அ-உ-ரி-3-6)

## வெற்றிலைக்கேணி-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திங்கள், செவ்வாய்க் கிழமைகளிலும் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் துருப்புக்காவிக் தரையிறங்கு கலன்களும், டோறாப் படகுகளும் தொடர்ச்சியாகத் தரித்து நின்றன. (அ-36)

## டிரான்ஸ்போமர் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிரான்ஸ்போமர் திடீரென வெடித்த சத்தம் கலாவெவ பிரதேசத்தை கிலிகொள்ளச் செய்தது.

நகரில் நின்ற மக்கள் ஓட்டமெடுத்தனர். 3கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்துக்கு சத்தம் கேட்டது.

இந்த முகாமில் இருந்த 250 முஸ்லிம் குடும்பங்கள் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். (இ-3)

## 11 கரும்புலிகளின் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பெற்றோர், பொதுமக்கள் சுடரேற்றி, மாலையிட்டு, மலர் தூவி வணக்கம் செலுத்திய பின் வீரவணக்கக் கூட்டங்கள் நடைபெறும்.

பின்னர் கரும்புலிகளின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தி ஊர்வலமாக மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித நினைவுக் கற்கள் நாட்டல் இடம்பெறும்.

சகல இடங்களிலும் சிவப்பு, மஞ்சள், கறுப்புக் கொடிகள் கட்டி, முக்கிய சந்திகளில் கரும்புலிப் பாடல்கள் ஒலிபரப்பி கரும்புலிகள் நினைவு கூறப்படுவர்.

இந்தக் கரும்புலித் தாக்குதலில் வீரமரணமடைந்த 11 பேரில் 9 பேரின் விவரங்கள் நேற்று வெளியாகியிருந்தன.

கரும்புலி லெப்டினன்ட் கலைச்செல்வன் (ஆறுமுகம் சந்திரகுமார் - அவிசாவளை), கரும்புலி லெப்டினன்ட் தங்கத்துரை அல்லது இராகுலன் (சீவரத்தினம் காந்தரூபன்- [illegible] மற்றைய கரும்புலிகளாவர். (உ-3)

## அரச ஊழியர்களுக்கு

# 45 வீத சம்பள உயர்வுக்கு ஆணைக்குழு சிபார்சு!

கொழும்பு, மார்ச் 16

அரசாங்க சேவையிலுள்ள அனைத்துத் தரப்பினரதும் சம்பளங்களை அதிகரிக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த 11ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவுக்கு திறைசேரியின் செயலாளர் பி.சி.பெரேரா தலைமை வகித்தார். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அரசாங்கத்தினால் ஆராயப்பட்டு நிதி நிலைமைக்கேற்ப அமுல் செய்யப்படும் என திவயின பத்திரிகை தெரிவிக்கிறது.

சம்பள முரண்பாடுகளை ஒழித்து சம்பள விகிதங்களை சமமாக்கும் பொருட்டு நியதிச் சபைகள், கூட்டுத்தாபனங்கள் உட்பட அரசாங்கத் துறை ஊழியர்களுக்கு 45 சதவீதம் சம்பள உயர்வு அளிப்பதற்கு இந்த ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-இ-3)

# வடபகுதிப் பணிகளுக்கு செஞ்சிலுவைக்கு 2 கோடி

வடபகுதியில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் நடவடிக்கைகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் மேலதிக நிதியுதவியாக இரண்டுகோடி ரூபாவை வழங்கி உள்ளது.

இலங்கையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மேற்கொண்டுள்ள திட்டங்களுக்கென பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த வருடம் ஆறு கோடி ரூபாவை வழங்கி உள்ளது.

நிவாரணம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கையுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய செஞ்சிலுவைச் சர்வதேச குழு செய்யும் பணிகளுக்கு இந்தப் பணம் பயன்படும் என பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாகவே வட பகுதியில் உதவிகளைச் செய்வதற்காக 2 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (அ-7)

## நாளை உலககிண்ண இறுதியாட்டம்:

# கிரிக்கெட் வீரர்களுக்கு ஏராளமான பரிசுகள்

கொழும்பு, மார்ச் 16

நாளை பாகிஸ்தானின் லாகூர் நகரில் ஸ்ரீலங்கா — ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெறும் உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியின் போது ஒவ்வொரு விளையாட்டு வீரரும் பெறும் ஒவ்வொரு ஓட்டங்களுக்கும் ஆயிரம் ரூபா பரிசளிக்கப்படும்.

ஸ்ரீலங்கா விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். எம். ரட்னாயக்கா இவ்வாறு கூறியுள்ளார்.

ஐம்பது ஓட்டங்களைப் பெற்றால் மூன்று லட்ச ரூபாவும் ஒரு செஞ்சரி அடித்தால் பத்துலட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

பந்து வீச்சாளர்கள் வீழ்த்தும் ஒவ்வொரு விக்கெட்டுக்கும் இருபதாயிரம் ரூபா பரிசு.

இந்தப் போட்டியில் ஸ்ரீலங்கா வீரர்கள் எப்படி விளையாடினாலும் அவர்களுக்குப் பரிசுகள் காத்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா நிறுவனங்கள் பல பணமும் பரிசும் வழங்க உள்ளன.

கப்டன் அர்ஜுனா ரணதுங்கவுக்கும் இறுதிப் போட்டியில் மிகச் சிறந்த வீரர் எனத் தெரிவு செய்யப்படுவருக்கும் புதிய கார்கள் வழங்கப்படும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (உ-7)

## ஹைக்கோ வருகிறது

சாவகச்சேரி, மார்ச் 16

அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வர உள்ள ''மாஹோ'' கப்பலில் யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்துக்கென ஒரு தொகுதி ஹைக்கோவும் எடுத்து வரப்படுகின்றன. (உ-7)

## இந்தியா--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வன்னிச் சேவை நேற்றிரவு அறிவித்தது.

கடந்த ஒரு மாத காலமாக இலங்கையை அண்மித்த கடற்பிரதேசத்தில் இந்திய கடற்படையும், விமானப் படையும் கூட்டாக, 60 கப்பல்களைத் தடுத்து நிறுத்தி சோதனை செய்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். (அ-9)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரி தரம் உயரும்

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி ஆஸ்பத்திரியை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்த சுகாதார அமைச்சு கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளது என்று மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. எஸ். சிவகுரு தெரிவித்தார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 16-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org